# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,134 — 1935 ம் ஹூ ஆடி மீ 19 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரம்.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வெலிப்பிட்டியா என்னுமிடத்தில் ஓர் சந்தை அமைத்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 281. குறிச்சி—பொலலிய.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். வ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | மாவட்டவத்தை .. | 5 வயதுள்ள ஓர் ஈரப்பலாவும், ஓர் மாமரமும், ஓர் தொம்பமரமும், 15 வயதுள்ள 3 கித்துல் மரங்களுமடங்கிய தோட்டம் | வெலிப்பிட்டியா வாசியாகிய ஜே. எல். எம். முஹம்மது என்பவர் | 0 1 2·9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ஹூ புரட்டாதி மாசம் 6 ந் தேதியிலன்று காலை 9 மணிக்கு ஹலல்ல அரசாட்சியார் பாடசாலையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறைக் கச்சேரி,
1935 ம் ஹூ ஆடி மீ 13 ந் உ.

சீ. ஜே. டேன். லங்றதீ,
உதவி அரசாட்சி ஏசண்டு, மாத்துறை.

---

### சுப்பிறீங்கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபொருந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு டிஸ்திறிக்குகளைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1935 ம் ஆண்டு ஆடி மாதம் 30 ந் திகதியாகிய செவ்வாய்க்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும் என்று பிரசித்தப்படுத்திய திகதி 1935 ம் ஆண்டு ஆவணி மாதம் 7 ந் திகதியாகிய புதன்கிழமை காலமே 12 மணி தொடங்கி அன்றும் அடுத்த நாட்களிலும் நடத்தப்படும் என்று மாற்றப்பட்டிருக்கிறது.—ஆதலால் அவ்விசாரணையிற் காரியசருமமுள்ளவர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,

யாழ்ப்பாணம் பிஸ்கால் கந்தோர்,
1935 ம் ஹூ ஆடி மீ 16 ந் உ.

எஸ். துரையப்பா,
வடமாகாண பிஸ்காலுக்காக.

---


PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.

231——J. N. 47597—134 (7/35)

T 1